**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts Madurai.

Calender : **CC.No. 312/2019**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for **Prosecution** அ.சா.**1**
**Defence**
**Court**

**Name** **:**லாரன்ஸ்

Father's/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 23.06.2022

**முதல் விசாரணை**:

நான் தற்போது திண்டுக்கல் தாலுகா காவல் நிலையத்தில் சிறப்பு சார்ஆய்வாளராக பணியில் உள்ளேன். இதற்கு முன்னர் தேனி போதைப்பொருள் நுண்ணறிவு பிரிவு காவலநிலையத்தில் தலைமைகாவலராக பணிபுரிந்துவந்தேன். கடந்த 15.05.2019 அன்று காவல் நிலையத்தில் இருந்தபோது காலை 8.10 மணிக்கு ரகசிய தகவலாளி

நிலையம் ஆஜராகி சார்பாய்வாளரிடம் கூறிய தகவலின் அடிப்படையில் அதை சார்பாய்வாளர் பொதுநாட்குறிப்பில் பதிவு செய்தார். காலை 8.15 மணிக்கு ஆய்வாளர் ராஜேஸ்கண்ணா என்பவருக்கு தகவல் தெரிவித்து மேல்நடவடிக்கை மேற்கொள்ள அனுமதி பெற்றார். அதன் பின்னர் காலை 8.25 மணிக்கு சார்பாய்வாளர் சதீஷ் அவர்கள் தலைமையில் நானும் தலைமைக்காவலர் பாஸ்கரும், முதல் நிலைகாவலர் ஐயம்மாள் என்பவரும் தேவையான உபகரணங்களுடன் நிலையத்தில் இருந்து புறப்பட்டு தேனி பழைய இரயில் நிலையம் அருகில் 8.50 மணிமுதல் கண்காணித்துகொண்டிருந்தபோது 9.45 மணிக்கு ஒரு ஆணும் பெண்ணும் வெள்ளை நிற உரசாக்குப்பையுடன் அங்கு வந்தனர் . அவர்களை ரகசிய தகவலாளி அடையாளம் காட்டிவிட்டு மறைந்துகொண்டார். சார்பாய்வாளர் சதீஷ்தலைமையிலான நாங்கள் அவர்கள் இருவரையும் பிடித்து எங்களை சுய அறிமுகம் செய்துகொண்டு விசாரித்தபோது அவர்கள் தேனி மாவட்டம் கீழக்கூடலூார் , 9 வது வார்டு, மாமுண்டிதேவர் சந்தை சேர்ந்த ராஜேந்திரன் மகன் சிவனேசன் என்றும்,மேற்படி ராஜேந்திரன் மனைவி புஷ்பம் என்றும் கூறினார்கள். நான் அருகில் உள்ள நடுவரிடமோ, அல்லது அரசுபதிவிதழ் பெற்ற அலுவலரிடமோ அழைத்து சென்று அவர்கள் முன்னிலையில் சோதனை செய்யவேண்டும் என்று தாங்களுக்கு உரிமை உள்ளது என கூறினோம். அதற்கு அவர்கள் காவல் துறை அதிகாரியாகிய தாங்களே சோதனை செய்யலாம் என்றும் வேறு எங்கும் செல்ல விருப்பம் இல்லை என்றும் கூறினர். அவர்கள் முன்னிலையில் 9.50 முதல் 10.30 மணிக்குள் சோதனை சம்மத கடிதம் தயாரித்து நானும், முதல் நிலை காவலர் ஐயம்மாளும் சாட்சியாக பாஸ்கரும் இருந்து எதிரிகள் இருவரும் கொடுத்த சம்மத கடிதத்தில் அவர்களிடம் கையொப்பம் பெற்று நாங்களும் சாட்சி கையொப்பம் செய்தோம். பின்னர் சார்பாய்வாளர் சதீஷ் அவர்கள் வைத்திருந்த பையை சோதனை செய்து பார்த்தபோது அதில் உலர் நிலையில்

1 கிலோ 500 கிராம் எடையுள்ள கஞ்சா இருந்தது. அவற்றை எலக்ட்ரானிக் தராசில் எடைபோட்டு பார்த்தோம்., அதில் இருந்து தலா 25 கிராம் எடையுள்ள இரண்டு காக்கி நிற கவரில் மாதிரிக்கு எடுத்துக்கொண்டு வெள்ளை நிற நூலால் கட்டி தேனி NIB சீல் வைத்து மீதி உள்ள கஞ்சாவை அதே உரசாக்கு பையில் போட்டுநூலால் கட்டி NIB சீல் வைத்தோம். அவற்றை கைப்பற்றியதற்கு ஒரு அத்தாட்சியில் காலை 10.30 மணிமுதல் 11.10 வரை தயாரித்து கையொப்பம் செய்தோம். 11.20 மணிக்கு எதிரியை கைது செய்து அவர்களுக்கும் அவர்கள் உறவினருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது. எதிர்கள் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தனர் . அதனை சார்பாய்வாளர் 11.20 மணி முதல் 12.00 மணிவரை பதிவு செய்தார். எதிரி மற்றும் சொத்துக்களை நிலையம் கொண்டுவந்து 12.30 மணிக்கு எதிரிகள் மீது நிலைய குற்ற எண் 67/2019 , ச/பி 8(C) r/w 20(b)(ii)(B) NDPS Act படி வழக்கு பதிவு செய்ய உதவி ஆய்வாளருக்கு நாங்கள் உதவியாக இருந்தோம். இதுசம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார். சோதனை சம்மத கடிதம் **அ.சா.ஆ.1**, அத்தாட்சி **அ.சா.ஆ.2**, ஆய்வு நமூனா **அ.சா.ஆ.3,** கைதுநமூனா **அ.சா.ஆ.4**, ஒப்புதல் வாக்குமூலத்தில் காணப்படும் எனது கையொப்பம் **அ.சா.ஆ.5** ஆகும்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

காலை 8.00 மணிக்கு காவல் நிலையத்தில் இருந்தேன். அன்றைய தினம் ரோல்கால் சார்பாய்வாளர் நடத்தினார் . அப்போது ஆய்வாளர் நிலையத்தில் இல்லை. வெளியில் வேலையாக இருந்தார். பெண்காவலரும் காலை நடந்த ரோல்காலில் கலந்துகொண்டார். எங்கள் காவல் நிலையத்தில் பணியில் பெண்காவலர் எவரும் பணியில் அமர்த்தப்படவில்லை. தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மூலமாகவோஅல்லது ஆயுதப்படைபிரிவில் இருந்தோ பெண்காவலரை அனுப்பி வைப்பார்கள் என்றால் சரிதான். பெண்காவலரை உதவிக்கு அனுப்பி வைக்கும் படி நான் வேண்டுகோள்

எதுவும் அனுப்பி வைக்கவில்லை. காவல் ஆய்வாளரால் வேண்டுகோள் அனுப்பப்படும். பெண்காவலரை அழைக்கும்போது பெண் கைதி அல்லது கைது செய்யப்படும் நபர் பற்றிய தகவல் கிடைத்த பின்னர் தான் பெண்காவலர் தேவை என வேண்டுகோள் அனுப்புவோம் என்றால் சரியல்ல. சார்பாய்வாளருக்கு தகவல் வந்தது என்றால் சரிதான். எனக்கு நேரடியாக தகவல் பற்றி எதுவும் தெரியாது. நாங்கள் நிலையத்தில் இருந்து 8.25 மணிக்கு புறப்பட்டோம். தேனி பழைய பேருந்துநிலையத்தில் இருந்து பெரிய குளம் செல்லும்ரோடு கிழமேல் சாலையா தென்வடல் சாலையா என்று எனக்கு ஞாபகம் இல்லை. தேனி பழைய இரயில் நிலையம் செல்லும் சாலை சுந்தரம் தியேட்டர் சாலை என்று அழைப்பார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இரயில் நிலையத்திற்கு செல்லும் சாலை கிழமேல் சாலையா தென்வடல் சாலையா என்று எனக்கு தெரியாது. பெரியகுளம் -தேனி சாலையில் ஒரு விநாயகர் கோவில் அருகில் தான் இரயில்வே நிலையம் செல்லும் சாலை உள்ளது. அந்த கோவிலில் இருந்து பழைய இரயில் நிலையம் சுமார் 20 மீட்டர் தொலைவில் உள்ளது. பழைய இரயில் நிலையம் செல்லும் வழியில் தேனி கிராம நிர்வாக அலுவலகம், தேனி ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது என்றும் இவைகளை கடந்த பின்னர் தான் இரயில் நிலையம் செல்ல முடியும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சம்பவ சமயத்தில் இரயில் நிலையம் செல்லும் வழியில் வீடுகளும் கடைகளும் இருந்தது என்றால் சரிதான். இரயில்நிலையத்திற்கு செல்லும் வழியில் தகவலாளி எதிரிகளை அடையாளம் காட்டினார். எதிரிகள் இரயில்வே நிலையத்தில் இருந்து தேனி பெரியகுளம் செல்லும் சாலையில் வந்துகொண்டிருந்தார்கள். வழக்கின் நடவடிக்கைகளை மேற்கொண்டபோது அந்த இடத்தில் யாருடைய வீடு அல்லது கடை முன்பு எதிரிகளை பார்த்து கைப்பற்றிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சோதனை சம்மத கடிதம், மற்றும்

கைதுநமூனா, அத்தாட்சி ஆகியவை இரண்டு எதிரிகளுக்கும் ஒரே ஆவணங்களாக தயாரிக்கப்பட்டது. வெள்ளை உரச்சாக்கை 2ம் எதிரி புஷ்பம் கொண்டுவந்தார். சோதனை சம்மத கடிதத்தின் அடிப்படையில் பெண் எதிரியை பெண்காவலர் மூலமாகவோ, 1ம் எதிரியை நாங்களும் தடவி பரிசோதனை செய்யவில்லை. சம்பவ இடத்தில் ஆவணங்களை சார்பாய்வாளர் தான் எழுதினார். எலக்ட்ரானிக் தராசில் எடைபோட்டது பாஸ்கரன் என்ற தலைமைக்காவலர் ஆவார். என் முன்னர் எலக்ட்ரானிக் தராசில் சரியாக தான் எடை போட்டார். அத்தாட்சியில் NIB சீல் பதிவு செய்தோமா என்று ஞாபகம் இல்லை. அத்தாட்சியில் இரண்டு எதிரிகள் பெயரையும் குறிப்பிட்டு அவர்களிடம் கையொப்பம் பெற்றோம். ஆவணங்கள் அனைத்தும் ஒன்றன்பின் ஒன்றாக தயாரிக்கப்பட்டது. ஆய்வாளர் ராஜேஷ்கண்ணா என்பவரும் கீழக்கூடலூரை சேர்ந்தவர் என்ாறல் அதுபற்றி எனக்கு தெரியாது. தேனிமாவட்டத்தை சேர்ந்தவர் என்று தெரியும். இவ்வழக்கிற்கு பின்னர் எதிரிகளின் உறவினர் ஆய்வாளர் மீது பொய் வழக்கு போடப்பட்டதாக கூறி உயர்அதிகாரிகளுக்கும், நீதிமன்றத்திற்கும் புகார் மனுக்கள் அனுப்பிய விபரம் எனக்கு தெரியாது. நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் சார்பாய்வாளருக்கு தகவல் எதுவும் வரவில்லை என்றும் அதன் பேரில் அவர்களுடன் கண்காணிப்பு பணிக்கு மேற்படி இடத்திற்கு செல்லவில்லை என்றும் சம்பவ இடத்தில் எதிரிகள் யாரையும் நீங்கள் பார்க்கவில்லை என்றும், எதிரிகளிடம் இருந்து போதை பொருள் கைப்பற்றப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. சொந்த பகையின் காரணமாக ஆய்வாளர் மேற்படி எதிரிகளை ஊரில் இருந்து அழைத்துவந்து வழக்கின் ஆவணங்களை பின்னிட்டு நிலையத்தில் வைத்து தயார் செய்து எதிரிகளை அச்சுறுத்தி அவர்களிடம் இருந்து கைரேகையும், கையெழுத்தும் பெறப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி ஆய்வாளரின் வேண்டுகோளுக்கிணங்கள் அதில் நிலையத்தில் வைத்து தயாரரிக்கப்பட்ட

ஆவணங்களில் கையெழுத்து செய்து தற்போது அதற்கேற்ப உண்மைக்கு புறம்பாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.